**கவனிக்க.**– 2006.12.29 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (II அ) மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1479 - 2007 ජනවාරි 05 වැනි සිකුරාදා - 2007.01.05

1479 ஆம் இலக்கம் – 2007 ஆம் ஆண்டு சனவரி மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (IIஆ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - |
| உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 10 |
| அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் | 10 |
| ஏல விற்பனைகள் | 12 |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2007, சனவரி 12 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2006, திசெம்பர் 29 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2007 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அட்டோர்னி தத்துவப்பத்திரத்தை இரத்துச் செய்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நுகெகொட, ஜம்புகஸ்முல்ல மாவத்தை, வாகன்த வீதி, இல. 15 இல் வசிக்கும் கமுதன்திரிகே நிஸான்த குமார பீரிஸ் ஆகிய நான், நுகெகொட, ஜம்புகஸ்முல்ல மாவத்தை, வாகன்த வீதி, இல. 15 இல் வசிக்கும் மஹேசிகா சிரோமனி பீரிஸ் (திருமணத்திற்கு முன்னர் காரியவசம்) என்பவருக்கு 2004 ஏப்பிரல் மாதம் 19 ஆந் திகதி தீப்த்தி எச். லியனகேவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட இலக்கம் 6921 இன்படி வழங்கப்பட்ட அட்டோர்னி தத்துவப்பத்திரத்தினை 2006 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் திகதியில் இருந்து இரத்துச் செய்த அதிகாரம் நீக்கப்பட்டதாக இலங்கை அரசுக்கும் பொதுமக்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*கமுதன்திரிகே நிஸான்த குமார பீரிஸ்.*

*1-03*

# அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள்

## கண்டி கடவத்சத்தர கங்கவட்ட கோரளை பிரதேச செயலாளர் வளவுக்குள் பிறநாட்டு குடிவகைகள் தவறணைகளைக் குத்தகைக்கு விற்றல்-2007

*1982 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 20 ஆந் திகதியிட்ட 207 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் பகிரங்கப்படுத்தப்பட்ட (பிரசுரிக்கப்பட்ட) 1983 ஆம் வருடத்திற்கும் அதற்குப் பிற்பட்ட காலப்பகுதிக்கும் ஏற்புடையதான பிறதேச குடிவகைகள் தவறணைகள் குத்தகைக்கு விற்கும் நிபந்தனைகளுக்கும் அக்காலப்பகுதியில் நடைமுறை வலுவுடையதான அனைத்து மதுவரி அனுமதிப்பத்திரங்களுக்கும் பொருந்தும் பொதுவான மதுவரி நிபந்தனைகளுக்கும் ஏற்ப 2007 ஆம் வருடத்தில் பிறதேச குடிவகைக்கான சில்லறைக்கு விற்கும் சிறப்புரிமைகளை வாங்குவதற்கு கண்டி கடவத்சத்தர கங்கவட்ட கோரளை பிரதேச செயலாளராகிய என்னால் 2006.12.28 ஆந் திகதி முற்பகல் 10.30 மணி வரையில் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.*

*2. அனைத்து கேள்விப்பத்திரங்களும் இலங்கையில் காணப்படும் பிரதேச செயலகங்களில் ஏதாவது ஒன்றில் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பப்படிவத்தில் தயாரிக்கப்படல் வேண்டும். அத்துடன்*

*(அ) கேள்விப் பிணைப்பணமாக கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிட்ட குறித்த கேள்வி பிணைப் பணத்தொகையை இலங்கையில் உள்ள ஏதாவது ஒரு பிரதேச செயலகத்தில் வைப்புப் பணமாக வைப்பிலிட்டு பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டையும்.*

*(ஆ) கேள்விக்காரரின் காணிகள் போன்ற அசையா சொத்துக்கள் அமைந்துள்ள பிரதேசத்தின் பிரதேச செயலாளரினால் பெற்றுக்கொண்ட தனது சொத்துக்கள் பற்றிய சான்றிதழையும் கேள்விப்பத்திரத்துடன் முன் வைக்கப்படல் வேண்டும்.*

*கேள்விப் பத்திரங்களையும், சொத்துக்கள் பற்றிய சான்றிதழ்களையும் முன்வைக்கும் கேள்விக்காரர்கள் மேற்படி பிறநாட்டு குடிவகைகள் தவறணைகளை விற்றலுடன் தொடர்புடைய நிபந்தனைக்கொத்தில் அடங்கிய கட்டளைகளை முறையாகக் கடைப்பிடிக்க வேண்டுமென இத்தால் ஆணித்தரமாக அறிவிக்கப்படுகின்றது. கேள்விப்பத்திரங்களை நிரப்பும்போது கேள்விக்காரர்கள் கீழ்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்துதல் வேண்டும்.*

*(i) தேகள்விப்பத்திரங்கள் முழுமையாக நிரப்பப்படல் வேண்டும். அவ்வாறு நிரப்பும்போது அங்கு குறிப்பிடும் தொகையை எண்ணில் மாத்திரம் அன்றி எழுத்திலும் குறிப்பிடல் வேண்டும்.*

*(ii) நிரப்பிய கேள்விப்பத்திரத்தில் சாட்சியாளர்களின் கையொப்பம் இடப்பட்டிருத்தல் வேண்டும்.*

*(iii) அனைத்து திருத்தல்களும் சொற்கள் வெட்டப்பட்டிருத்தலும் கேள்விக்காரரின் சுருக்க ஒப்பத்துடன் திகதியும் இட்டு உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.*

*இங்கு வேண்டப்படும் தேவைப்பாடுகளுக்கு உட்படாத கேள்விகள் நிராகரிக்கப்படும்.*

*3. முறையாக நிரப்பிய கேள்விப்பத்திரத்தைக் கேள்வி வைப்புப்பணம் வைப்பிலிட்டுப் பெற்றுக்கொண்ட-*

*(அ) பிரதேச செயலகப் பற்றுச்சீட்டுடனும்*
*(ஆ) சொத்துக்கள் பற்றிய சான்றிதழுடனும்*

*இணைத்து கடித உறையொன்றில் இட்டு முத்திரையிட்டு, அத்தகைய கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் "தவறணையின் இலக்கமும் பெயரும்" குறித்து கண்டி கடவத்சத்தர கங்கவட்ட கோரளை பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில்*

கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் கால எல்லை முடிவதற்கு முன்பு இடுதல் வேண்டும். இல்லாவிட்டால் கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் காலவரையறை முடிவதற்கு முன்பு கண்டிப் பிரதேச செயலாளருக்கு கிடைக்கும்படி பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

4. ஒரு குத்தகை தொடர்பாக கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளும் முடிவு நேரம் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தகைய நேரங்களில் அனைத்து கேள்விக்காரரும் கண்டி பிரசேத செயலகத்தில் சமுகமளித்திருத்தல் வேண்டும்.

5. திருப்தியாக கேள்விப்பத்திரத்தை முன்வைத்த கேள்விக்காரர் "சிறப்புரிமைகளை வாங்கியவர்" என பிரகடனப்படுத்தப்பட்ட பின் அன்றைய தினம் பி. ப. 2.30 மணிக்கு முன்பு கண்டி பிரதேச செயலாளரினால் விதிக்கப்படும் பணத்தொகையொன்றை பிணைப் பணமாக கண்டிப் பிரதேச செயலகத்தில் வைப்பிலிட்டு உரிய பிறநாட்டு குடிவகைகள் தவறணைகள் விற்பனை செய்யும் நிபந்தனைக்கொத்தில் கையொப்பமிடல் வேண்டும். இக்கொடுப்பனவை ரொக்கப்பணமாக அல்லது வங்கியொன்றினால் வழங்கப்பட்ட "கொடுப்பனவுக் காசு" எனக் குறிப்பிட்ட காசாலையொன்றினால் அல்லது இலங்கை வங்கியினாலோ அல்லது மக்கள் வங்கியினாலோ வழங்கப்பட்ட "பாதுகாப்பான காசோலை" என அழைக்கப்படும் காசோலையினாலோ அல்லது வங்கியொன்றினால் அவ்வங்கியின் பெயருக்கு வழங்கப்பட்ட காசோலையொன்றினாலோ செலுத்தப்படல் வேண்டும்.

6. பிறதேச குடிவகைகள் தவறணைகளினாலோ வேறு வலுவுடைய அனுமதிப்பத்திரங்களையுடைய வியாபார நிலையங்களினாலோ விற்பனைக்காக மொத்தமாக (பீப்பாய்க்கணக்கில்) பிறநாட்டு குடிவகை விநியோகிக்கப்படமாட்டாது என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

7. பாதுகாப்புக் காரணமாக கண்டி எசல பெரஹர நடைபெறும் காலங்களில் இங்கு கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்படும் கொழும்பு வீதி, இல. 1 இலுள்ள பிறதேச மது விற்பனை தவறணையை தற்காலிகமாக மூடுவதற்குரிய கட்டளையை என்னால் பிறப்பிக்க வேண்டி ஏற்பட்டால், இவ்வாறு தவறணையை மூடிய காலம் தொடர்பாக குத்தகை வாரத்தில் சலுகை ஏற்பாடு ஏதும் செய்யப்படமாட்டாது.

8. குறிப்பிட்ட திகதியில் விற்பனை செய்ய முடியாதுபோன தவறணை குத்தகைகள் 2007.01.18 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு மீண்டும் விற்பனை செய்யப்படும். அன்றைய தினம் கேள்விப்பத்திரங்கள் முன் வைத்தற்கான தேவைப்பாடுகள் இவ்வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு ஏற்புடையதாயிருத்தல் வேண்டும்.

9. மேலதிக விபரங்கள் இக்காரியாலயத்தில் கேட்டு அறிந்துகொள்ளலாம்.

பீ. ஜீ. எச். எம். சுகததாச,
பிரதேச செயலாளர்,
கண்டி, கடவத்சத்தர கங்கவட்ட கோரளை.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
கண்டி, கடவத்சத்தர கங்கவட்ட கோரளை,
2006, திசெம்பர் 06.

**அட்டவணை**

*2007 ஆம் ஆண்டிற்கான அங்கீகரிக்கப்பட்ட பிறதேச குடிவகைகள் தவறணைகளின் படடியல் – கண்டி மாவட்டம்*

| தொடர் இலக்கமும் பெயரும் | பிரிவு | தவறணை அமைய வேண்டிய பிரதேசம் | தவறணை திறந்திருக்க வேண்டிய நேரம் | கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் |
|---|---|---|---|---|
| கொழும்பு வீதி இல. 01 | கண்டி நகரத்தில் இல. 17 யட்டிநுவர மற்றும் இல. 18 கொடுகொடெல்ல' வீதி. | கண்டி நகரத்தில் இல. 17 யட்டிநுவர மற்றும் இல. 18 கொடுகொடெல்ல வாக்காளர் பிரிவிற்குள் கொழும்பு வீதி, காசல் வீதி சந்தியிலிருந்து கொழும்பு வீதிக்கும் வட்டுகொடபிட்டிய பாதையில் சந்திக்கும் இடையில் கொழும்பு வீதி இரு மருங்கிலும் | மு. ப. 11.00 மணியிலிருந்து பி. ப. 2.00 மணி வரை மற்றும் பி. ப. 5.00மணி யிலிருந்து பி. ப. 8.00 மணி வரை | 2006.12.28 ஆந் திகதி மு.ப. 10.30 மணி வரை. |

**பிறதேச குடிவகைகள் தவறணைகளின் குத்தகைக்காக வைப்பிலிட வேண்டிய**
**கேள்வி வைப்புப் பணம் – 2007**

கொழும்பு வீதி, இல. 1-பிறநாட்டு குடிவகைகள் தவறணை ரூ. 5,000

(கவனத்திற்கு.- இலங்கை மதுவரி திணைக்களத்தின் ஈ/ஜீ/ஆர்/எல்/2007 இலக்கமும் 2006.11.27 ஆந் திகதியிட்ட கடிதத்தின்படி.)

1-16

# ஏல விற்பனைகள்

## கமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிடெட்

ஆதனம் ஏல விற்பனை

*1990 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் 4ஆம் பிரிவின் கீழ் கமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிடெட் பணிப்பாளர்கள் சபையினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் இங்கு கீழ்க்காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட ஆதனம் அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.*

*2007, சனவரி 31 ஆந் திகதி காலை 11.00 மணிக்கு மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், மெதபத்து சியண கோளையில் எம்பரலபுவ கிராமத்தில் அமைந்துள்ள மில்லகாவத்த என்ற காணியின் நில அளவையாளர் வி. எப். ஜே. பெரேராவின் 09.03.1999 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 14166 இல் காண்பிக்கப்பட்ட பகுதிபடுத்திய காணித்துண்டென லொட் 4A1. இக்காணியின் விஸ்தீரணம் 0எ. 0றூ. 16.5பே.*

*கடன் எடுத்த பியிம்பிகே ருவண் புஷ்பகுமார பெர்னாந்து மேற்கூறிய காணியின் கமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிடெட்டிற்கு ஈடுவைத்துள்ளார்.*

***தீர்மானம் பற்றிய விளம்பரத்துக்காக.***- *13.10.2006 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும் 14.10.2006 ஆந் திகதியுடைய "லங்காதீப", "தினகரன்", "த ஐலண்ட்" பத்திரிகைகளையும் விற்பனை விளம்பரத்துக்காக 05.01.2007ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும் 05.01.2007 "லங்காதீப", "த ஐலண்ட்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.*

***காணிக்கு செல்லும் விதம்.***- *கிரில்லவெல்ல சந்தியில் (கண்தகாப்பு சந்தி) இருந்து வெலிவேரிய வீதியில் கி. மி. 1.6 அரலிய சந்திக்கு செல்லவும். அதன் பிறகு வலது பக்கம் திரும்பி 01. கி. மீட்டர் எம்பரலுவ வீதியில் செல்லவும். அதன் பிறகு இடது பக்கம் திரும்பி பிரதேச சபையான தார் இட்ட வீதியால் சென்று நெதுண்கா சந்திக்கு சென்று மீட்டர் 400 சென்ற பிறகு இவ் ஆதனத்தை அடைய முடியும்.*

***கட்டணம் செலுத்தும் விதம்.***- *ஏலவிற்பனையின் இறுதியில் உத்தேச கொள்வனவாளர் பின்வரும் கட்டணங்களை பணமாகச் செலுத்த வேண்டும் :-*

1. *கொள்வனவு விலையில் 10% ;*
2. *உள்ளூராட்சி விற்பனை வரி 1% ;*
3. *ஏலதாரரின் தரகுப்பமான 2 1/2% ;*
4. *ஏலவிற்பனை தயாரிப்பதற்கான நொத்தாரிசுக் கட்டணம் ரூபா 2,000 ;*
5. *கூவுவோர் இலிகிதர் கட்டணம் ரூபா 500.00 ;*
6. *விளம்பரத்துக்காக செலவு செய்யப்பட்ட எல்லாம் ;*
7. *மிகுதி 90% ஏலத் திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் கமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிடெட் பிரதான காரியாலயத்தில் பணமாக செலுத்த வேண்டும்.*

*உரித்து உறுதிகளையும் தொடர்பு ஆவணங்களையும் பின்வரும் இடத்தில் பெற்றுக்கொள்ள முடியும் :-*

*எல். பி. சேனாநாயக்க (ஜே. பி.),*
*உத்தரவுபெற்ற ஏலதாரர்*
*விலைமதிப்பிடுநர், மாவட்ட நீதிமன்றம்*
*மற்றும் மேல் வர்த்தக நீதிமன்ற ஆணையாளர்,*
*அரசாங்க வர்த்தக வங்கிகளின் ஆணையாளர்,*
*இல. 99, புதுக் கடை வீதி, கொழும்பு 12.*
*தொலைபேசி/பெக்ஸ் இல.: 2445393*

*முகாமையாளர்*
*கமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிடெட்,*
*21, பிரிஸ்டல் வீதி,*
*கொழும்பு 01.*
*தொலைபேசி இல.: 2347717*
*பக்ஸ் இல.: 2347717*

*1 -84*

---

## ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட் - கம்பஹா கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் கடன்களை மீள அறவிடும் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரிவு 4 இன் கீழான ஏல விற்பனை*

**பெறுமதியான சொத்தின் ஏலவிற்பனை**

**உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பீ. பீ. கங்கொடவில அவர்களால் 1972, ஒற்றோபர் 27 ஆந் திகதியிடப்பட்டுத் தயாரிக்கப்பட்ட வரைபட இல. 2380 இல் துண்டு இல. 7 எனக்குறிக்கப்பட்ட மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்திலுள்ள அளுத்குரு கோறளையின் ராகம் பற்றுவில், கம்பஹா பிரதேச சபையின் கலஹிட்டியாவ உப அலுவலகப் பிரிவுக்குள் கலஹிட்டியாவையிலமைந்த காணியிலிருந்தும், வெளியிலிருந்தும் "ஹிக்கஹவத்த" என அழைக்கப்படும் காணியும் அதிலுள்ள கட்டிடங்கள் மற்றும் அனைத்துமுட்பட்டவை.**

***(காணியின் விஸ்தீரணம் : 18.2 பேர்ச்சஸ்)***

*(ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட்டிற்கு சொத்தை ஈடுவைத்தவர்களும் கடமைப்பட்டவர்களுமான பனாவல பத்திரனலாகே டொன் பியரட்ன பத்திரண மற்றும் பனாவல பத்திரனலாகே டொன் பிரியந்த குமார பத்திரண ஆகியோர், கம்பஹா பிரசித்த நொத்தாரிசு பி. என். ஏக்கநாயக்க அவர்களால் 2003, யூன் 9 ஆந் திகதியிடப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்பட்ட முறி இல. 3783 இல் கொடுப்பனவு தவறியுள்ளார்கள்.)*

ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட்டால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழ், கீழே விபரிக்கப்படும் சொத்தை அதே இடத்தில், 2007.01.19 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு பகிரங்க ஏலத்தில் நான் விற்பனை செய்வேன்.

***தீர்மான அறிவித்தலுக்கு.***- தயவுசெய்து 2005, நவெம்பர் 18 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2006, மார்ச் 21 ஆந் திகதிய 'ஐலண்ட்', 'திவயின', 'தினகரன்' ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.**- சித்திகரமான கொள்வனவாளர் ஏலத்தினிறுதியில் பின்வரும் தொகைகளைப் பணமாக செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;
(2) உள்ளூராட்சி சபைகளுக்கான 1% (ஒரு வீதம்) ;
(3) ஏலதாரர் தரகுப் பணமாக, கொள்வனவு விலையின் 2 1/2% (இரண்டரை வீதம்) ;
(4) விற்பனை நிபந்தனைகளை அத்தாட்சிப்படுத்தலுக்கான நொத்தாரிசுக் கட்டணமாக ரூபா 2,000 ;
(5) இலிகிதர், கூவுவோர் கட்டணமாக ரூ 500 ;
(5) விளம்பர மொத்தச் செலவு.

விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் கொள்வனவு விலையின் எஞ்சிய 90% ஐ ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட்டில் வைப்பிலிட வேண்டும்.

மேலதிக விபரங்கள், காணி உறுதி, வேறேதேனும் தொடர்புடைய ஆவணங்களைப் பரீட்சிக்கவும், பெறவும் கம்பஹாக் கிளை முகாமையாளரை - 0332222520 - ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட் அல்லது ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட் தலைமையலுவலக கடன் மேற்பார்வை மற்றும் மீளப்பெறுகைத் திணைக்கள பிரதம முகாமையாளரைத் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இல.: 2881815, 2881816.

ரஞ்ஜித்த எஸ். மஹநாம
(சமாதான நீதவான்-அகில இலங்கை),
நீதிமன்ற ஆணையாளர், மதிப்பீட்டாளர்,
உத்தரவுபெற்ற ஏலதாரர்.

மஹநாம ட்ரைவ்,
474, பிட்டகோட்டே,
கோட்டே.
தொலைபேசி இல.: 2883121

1-107/1

---

## ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட் - மினுவாங்கொடை கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் கடன்களை மீள அறவிடும் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரிவு 4 இன் கீழான ஏல விற்பனை*

**பெறுமதியான சொத்தின் ஏல விற்பனை**

**உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. கே. ஏ. எஸ். பத்மினி அவர்களால் 1995, சனவரி 9 ஆந் திகதியிடப்பட்டுத் தயாரிக்கப்பட்ட வரைபட இல. 461 இல் துண்டு இல. 2 எனக்குறிக்கப்பட்ட காணியிலிருந்தும் வெளியிலிருந்தும் "திவுல்கஹவத்த" என அழைக்கப்படும் பிரிக்கப்பட்ட, நிர்ணயிக்கப்பட்ட காணித் துண்டானது அதிலுள்ள கட்டிடங்கள் மற்றும் அனைத்துமுடன். மேல் மாகாண சபை, கம்பஹா மாவட்டத்தில் அளுத்குரு கோறளை தேசிய பற்றுவில் மினுவாங்கொடை பிரதேச சபையின் மினுவாங் கொடை உப அலுவலக எல்லைக்குள் களஹுகொட எனுமிடத்தில் அமைந்துள்ளது.**

**(காணியின் விஸ்தீரணம் ; 26.06 பேர்ச்சஸ்)**

*(ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட்டிற்கு சொத்தை ஈடுவைத்தவரும் கடமைப்பட்டவருமான ஹாலிஹிங்க மலட்ரோய் பெரேரா அவர்கள் நீர்கொழும்பு பிரசித்த நொத்தாரிசு ஜீ. எம். எம். ஃபெனாண்டோ அவர்களால் 2003, மார்ச் 27 ஆந் திகதியிடப்பட்டு அத்தாட்சிப் படுத்தப்பட்ட பிணை முறி இல. 430 இல் கொடுப்பனவு தவறியுள்ளார்.)*

ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட்டால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழ், கீழே விபரிக்கப்படும் சொத்தை, 2007, சனவரி 25 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு அதேயிடத்தில் பகிரங்க ஏலத்தில் நான் விற்பனை செய்வேன்.

**தீர்மான அறிவித்தலுக்கு.**- தயவுசெய்து 2006, நவெம்பர் 3 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2006, நவெம்பர் 22 ஆந் திகதிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.**- சித்திகரமான கொள்வனவாளர் ஏலத்தினிறுதியில் பின்வரும் தொகைகளைப் பணமாக செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;
(2) உள்ளூராட்சி சபைகளுக்காகச் செலுத்தப்பட வேண்டிய உள்ளூராட்சி வரியாக 1% (ஒரு வீதம்) ;
(3) ஏலதாரர் தரகுப் பணமாக, விற்பனை விலையின் 2 1/2% (இரண்டரை வீதம்) ;
(4) விற்பனைக்கான மொத்த விளம்பரச் செலவு ;
(5) இலிகிதர், கூவுவோர் கட்டணமாக ரூ. 500 ;
(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுக் கட்டணமாக ரூ. 2,000.

விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் விலையின் எஞ்சிய 90% ஐ ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட்டிற்குச் செலுத்தப்படல் வேண்டும்.

மேலே குறிப்பிடப்பட்டவாறு, 30 நாட்களுக்குள் எஞ்சிய தொகை செலுத்தப்படாவிடின், ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% ஐப் பறிமுதல் செய்து சொத்தை மீள விற்பனை செய்யும் உரிமை வங்கிக்குண்டு.

காணி உறுதி மற்றும் ஏனைய ஆவணங்களை மினுவாங்கொடைக் கிளை முகாமையாளரை தொலைபேசி இலக்கங்கள் 2297377/2296882

அல்லது "கொழும்பு 10, டீ. பீ. ஜயா மாவத்தை, இல. 479, ஹ. ந. வ. கோபுரம், ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட், பிரதம முகாமையாளர்-(மீளப்பெறல்), தொலைபேசி இலக்கங்கள் : 0112661815/2661816" இல் தொடர்புகொண்டு பெறலாம்.

ரஞ்ஜித்த எஸ். மஹநாம
(சமாதான நீதவான்-அகில இலங்கை),
நீதிமன்ற ஆணையாளர், மதிப்பீட்டாளர்,
உத்தரவுபெற்ற ஏலதாரர்.

மஹநாம ட்ரைவ்,
474, பிட்டகோட்டே,
கோட்டே.
தொலைபேசி இல.: 2863121

1-107/2

---

## வரையறுக்கப்பட்ட தேசிய அபிவிருத்தி வங்கி - சிலாபம் கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழான விற்பனை

**வடமேல் மாகாணம். புத்தளம் மாவட்டம், சிலாபம் பதிவகப் பிரிவிற்குட்பட்ட பிட்டிகல் கோறளை வடக்கு ஆனைவிழுந்தான் பற்று சிலாபம் பட்டினத்தின் நகர சபை எல்லைகளுக்குட்பட்ட ஈச்சம்பிட்டிய 2 ஆம் இலக்க வட்டாரம், சிங்ஹபுர வீதியில் அமைந்துள்ளதும் "தட்டான்கொட்டுவ" என அழைக்கப்படுவது மான காணியில் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். எம். டீ. பி. பெரேரா தயாரித்த 1991, நவெம்பர் 8 ஆந் திகதிகொண்ட 747 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 1 என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்டதும் 16.88 பேர்ச்சஸ் பரப்பளவுடையதுமான காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள மரங்கள், பயிர்ச்செய்கைகள். கட்டிடங்கள் மற்றும் அனைத்தையும் சேர்த்து.**

**உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பேர்ட்ரம் டீ சில்வா தயாரித்த 30.01.1973 ஆந் திகதி கொண்ட 721 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 12 என அடையாளமிடப்பட்டு காட்டப்படும் 10 அடி அகலப் பாதைக்கென ஒதுக்கப்பட்ட காணியைப் பாவிப்ப தற்கும் பேணுவதற்குமான வழியுரிமையுடன் சேர்த்து ஏல விற்பனை**

"சந்தமினி போட்டோ வீடியோ மற்றும் கொம்யூனிகேஷன்" என்னும் பெயர் மகுடத்தின் கீழ் ஏக உரிமையாளராக வியாபாரம் நடத்தும் முதியன்சேலாகே பேர்சி அந்தனி பெர்னாண்டோ என்பவர் கடனெடுத்தவர் என்ற வகையில் வரையறுக்கப்பட்ட தேசிய அபிவிருத்தி வங்கியின் சார்பில் (முன்னர் இலங்கை தேசிய அபிவிருத்தி வங்கி) நீர்கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஏ. கே. எம். டீ. மெல் தயாரித்த 2002, பெப்புருவரி 2 ஆந் திகதி கொண்ட 558 ஆம் இலக்க முறியின்மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார். ஆதலால் வரையறுக்கப்பட்ட தேசிய அபிவிருத்தி வங்கியால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் மேற்படி ஆதனத்தை 2007, சனவரி 19 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் நான் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வேன்.

**மேலதிக விபரங்களுக்கு.**-2005, திசெம்பர் 16 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2005, திசெம்பர் 3 ஆந் திகதிய "தி ஐலன்ட்", "திவயின" மற்றும் 2005, திசெம்பர் 2 ஆந் திகதிய "தினகரன்" ஆகிய செய்தித்தாள்களையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.**-உத்தேசக் கொள்வனவாளர் ஏலத்தின் முடிவில் பின்வரும் தொகைகளைச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10%, (2) உள்ளூர் அதிகாரசபைக் கட்டணங்கள் 1%, (3) ஏலதாரரின் தரகு 2 1/2%, (4) 55,000 ரூபாவுக்கு மேற்படாமல் மொத்த விளம்பரச் செலவின் 5%, (5) எழுது வினைஞரினதும் அழைப்போரினதும் கட்டணம் ரூபா 500, (6) விற்பனை நிபந்தனைகளின் அத்தாட்சிப்படுத்துகைக்கு நொத்தாரிசுவின் கட்டணம் ரூபா 2,000,

கொள்வனவு விலையின் மிகுதி 90% ஏலத்தின் பின்னர் 30 நாட்களுக்குள் வரையறுக்கப்பட்ட தேசிய அபிவிருத்தி வங்கிக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

உரித்து உறுதிகளையும் சார்புடைய ஏனைய ஆவணங்களையும் "முகாமையாளர், வரையறுக்கப்பட்ட தேசிய அபிவிருத்தி வங்கி, இல. 40, நவம் மாவத்தை, கொழும்பு 02" என்னும் முகவரியில் பார்வையிடலாம் அல்லது பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி இல. : 2448448, 2437701-10.

பி. கே. ஈ. சேனபதி,
நீதிமன்ற ஆணையாளர்,
தரகர், பட்டய ஏலதாரர்.

134, பெத்தகன வீதி,
கோட்டே.
தொலைபேசி இல.: 2873656
பெக்ஸ் இல.: 2871184
மொபைல் : 0777-672082

1-109

---

## இலங்கை வங்கி

1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களினதும்கீழ் விற்பனை அறிவித்தல்

### சொத்து, நிலமனை ஏலவிற்பனை

கடன் தொடர்பு இல. 1998/204/DR

"இலங்கை வங்கிப் பணிப்பாளர்கள் சபை இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின் கீழ் எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2001.05.11 ஆந் திகதிய 1184 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2002.09.13 ஆந் திகதிய 1254 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2003.11.28 ஆந் திகதிய 1317 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2001.05.09 மற்றும் 2002.09.06 ஆகிய திகதிகளில் "தினமின", "டெய்லிநியூஸ்", "தினகரன்" ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும்

விற்பனைத் திகதிவரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிடவேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விவரித்த சொத்தையும் நிலமனையையும் இல. 60/50, தெல்கஹவத்த, பமுனுவ றோட், மஹரகம என்னும் முகவரியைச் சேர்ந்த "குமாரசிங்ஹ ஏலதாரர் களின்" ஏலதாரர் திரு. சி. குமாரசிங்ஹ 2007, சனவரி 20 ஆந் திகதி மு.ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது."

## முதலாவது அட்டவணை

சப்ரகமுவ மாகாணம், கேகாலை மாவட்டம், அட்டுலுகம் கோரளை கிழக்கில் தெரணியகலயில் அமைந்த மாளிகாதென்ன என அழைக்கப்படும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஆர். எச். தர்மவர்த்தன தயாரித்த 1997.06.14 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 97.06.11 இல் விவரித்த துண்டு 1 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில் : எல். வி. டிங்கிரி மஹத்மயா உரிமைகோரும் காணியும் ; கிழக்கில் : எல். வி. டிங்கிரி மஹத்மயா உரிமைகோரும் காணியும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எச். சி. வன்கலன்பேர்க் தயாரித்த 1980, ஓகத்து 9,28,29 ஆந் திகதிகளிட்ட வரைபடம் இல. 1751 இல் துண்டு 27 (றோட்); தெற்கில் : வரைபடம் இல. 1751 இல் துண்டுகள் 26 மற்றும் 27 உம் ; மேற்கில் : எல். வி. டிங்கிரி மஹத்மயா உரிமைகோரும் காணியும், வரைபடம் இல. 1751 இல் துண்டு 26 ஐ எல்லைகளாகக் கொண்டு முப்பத்தொன்பது தசம் இரண்டு பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 39.2 பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள சகலதும் ஆகும். இது அவிசாவளை காணிப்பதிவகத்தில் கியூ. 6/295 இல் பதிவுசெய்யப்பட்டது.

## இரண்டாவது அட்டவணை

மேற்குறிப்பிட்ட தொரணியகலையில் அமைந்த மாளிகாதென்ன என அழைக்கப்படும் காணி மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 1751 இல் விவரித்த துண்டு 27 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில் : இக்காணியின் துண்டுகள் 23, 24, 25 உம் ; எச். ரி. மென்டிஸ் விஜேசூரிய உரிமைகோரும் காணியும் ; கிழக்கில் : இக்காணியின் துண்டுகள் 20, 21, 22 உம் ; தெற்கில் : எச். ரி. மென்டிஸ் விஜேசூரிய உரிமைகோரும் காணியும் துண்டுகள் 18, 16 மற்றும் 19 உம் போபேகந்த எலயும் ; மேற்கில் : எஸ்டேட் றோட்டும் எச். ரி. மெண்டிஸ் உரிமைகோரும் இக்காணியின் துண்டுகள் 26, 24 உம் எல்லைகளாகக் கொண்டு பத்தொன்பது பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 19பே.) விஸ்தீரணமுடையது. இது அவிசாவளை காணிப்பதிவகத்தில் கியூ6/247 இல் பதிவு செய்யப்பட்டது.

பணிப்பாளர்கள் சபை கட்டளைப்படி,

ஏ. என். முனசிங்ஹ,
கிளை முகாமையாளர்.

இலங்கை வங்கி,
தெரணியகல.

1-111

## இலங்கை வங்கி

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும், 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களினதும் கீழ் விற்பனை அறிவித்தல்*

## சொத்து, நிலமனை ஏலவிற்பனை

"இலங்கை வங்கிப் பணிப்பாளர்கள் சபை இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின்கீழ் எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2006.07.07 ஆந் திகதிய 1453 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2006.06.26 ஆந் திகதிய "தினமின", "டெய்லிநியூஸ்", "தினகரன்" ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதிவரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிடவேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விவரித்த சொத்தையும் நிலமனையையும் இல. 290, ஹவ்லொக் றோட், கொழும்பு 5 என்னும் முகவரியைச் சேர்ந்த திருவாளர்கள் சொக்மன் & சமரவிக்கிரம 2007.02.10 ஆந் திகதி மு.ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப் படுகின்றது."

## அட்டவணை

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், களுத்துறை, தொட்டமுனை வடக்கு களுத்துறை பத்தயில் களுத்துறை பட்டின சபை எல்லைகளுள் களுத்துறை வெலபுரயில் அமைந்த தி அல்விஸ் பிளேஸ், வரிமதிப்பிலக்கம் 45/3ஐக் கொண்ட வெலகொடவத்தயின் துண்டு இல. 12 என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் என். டீ. எஸ். வீரக்கொடி தயாரித்த 1996 நவெம்பர் 23 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 3738 இல் விபரித்த துண்டு 12பீ என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில் : துண்டு 12ஏயும் ; கிழக்கில் : வரைபடம் இல. 1158 இல் துண்டு 6 உம் ; மேற்கில் : துண்டு 5 உம் (பாதைக்காக ஒதுக்கப்பட்டது தற்சமயம் பட்டினசபை பாதை) மற்றும் வரைபடம் இல. 1158 இல் பாதையும் துண்டு 18 உம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 3738 இன்படி பதினான்கு தசம் எட்டு ஒன்று (0ஏ. 0றூ. 14.81பே.) பேர்ச்சஸ் விஸ்தீரணமுடைய காணியும் அத்துடன் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் வளர்பவையும் ஆகும். இது களுத்துறை காணிப்பதிவகத்தில் ஜி 152/76 இல் பதிவு செய்யப்பட்டது,

அத்துடன் மேற்குறிப்பிட்ட களுத்துறை வேலாபுரவில் அமைந்த வெலகொடவத்த (பாதைக்கு ஒதுக்கப்பட்டது) என அழைக்கப்படும் காணி களுத்துறை மாவட்ட நீதிமன்ற வழக்கு இல. பி / 1383 இல் கோவைப்படுத்தப்பட்டது.

உத்தரவுபெற்ற நில அளவையாளர் என். ஜீ. எஸ். வீரக்கொடி தயாரித்த 1996, நவெம்பர் 23 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 1158 இல் விபரித்த துண்டு 5 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு மீதான வழியுரிமையும் மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 1158 இன்படி ஏழு தசம் இரண்டு சைபர் பேர்ச்சுக்கள் (0ஏ. 0றூ. 7.20பே.) விஸ்தீரணமுடையதாகும். இது களுத்துறை காணிப்பதிவ கத்தில் ஜீ 2/149 இல் பதிவுசெய்யப்பட்டது.

அத்துடன்

மேற்குறிப்பிட்ட களுத்துறை வேலாபுரவில் அமைந்த வெலகொட வத்த (பாதைக்கு ஒதுக்கப்பட்டது) என அழைக்கப்படும் காணி மேற்குறிப்பிட்ட வரைபடத்தில் விபரித்த துண்டு 10 என அடையாள மிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 1158 இன்படி தசம் எட்டு நான்கு பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 00.84பே.) விஸ்தீரணமுடையது. இது களுத்துறை காணிப்பதிவகத்தில் ஜி. 2/155 இல் பதிவு செய்யப்பட்டது.

பணிப்பாளர்கள் சபை கட்டளைப்படி,

எம். ஜி. விஜேதுங்க,
முகாமையாளர்.

இலங்கை வங்கி,
பேருவளை கிளை.

01-119

---

**இலங்கை வங்கி**

1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும், 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயமான) 22 ஆம் பிரிவு அதன் திருத்தங்களினதும் கீழ் விற்பனை அறிவித்தல்

**சொத்து, நிலமனை ஏல விற்பனை**

(வாதுவை, கடற்கரை வீதி, இல.16 என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. எஸ். ஐ. பி. தி. சில்வாவின் கடன் பொறுப்புகளுக்காக ஈடுவைத்த ஆதனம்-
ஏக உரிமையாளர் : லக்சிறி ஏஜென்சீஸ்.)

"இலங்கை வங்கிப் பணிப்பாளர்கள் சபை இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின் கீழ் எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2006.11.17 ஆந் திகதி 1472 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 10.11.2006 ஆந் திகதி "தினமின", "தினகரன்" ஆகிய பத்திரிகைகளிலும் 2006.11.13 ஆந் திகதி "டெய்லிநியூஸ்" பத்திரிகையிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக் கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதிவரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிடவேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விவரித்த சொத்தையும் நிலமனையையும் இல. 474, மஹாநாம ட்ரைவ், பிட்டகோட்டை, கோட்டை என்னும் முகவரியைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர்கள் திருவாளர்கள் ஆர். எஸ். எம். ஏலதாரர்கள் 2007.01.27 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது."

**முதலாவது அட்டவணை**

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், பாணந்துறை, தொட்டமுனை பாணந்துறை தல்பிட்டி தெபத்த பிரதேச சபை எல்லைகளுள் தல்பிட்டிய வடக்கில் அமைந்த கிரிபெல்லகஹவத்த என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டி. ஏ. விஜேசூரிய தயாரித்த 1998, மார்சு 26 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 1111 இல் விவரித்த துண்டு 1பீ என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில் : வரைபடம் இல. 1111 இல் துண்டு 1ஏயும் (எனினும் துண்டு 1 என பதிவுசெய்யப்பட்டது) ; கிழக்கில் : வரைபடம் இல. 1111 இல் துண்டு 1ஏ மற்றும் 1சியும் வரைபடம் இல. 1460 இல் துண்டு 2 வரைபடம் இல. 350 இல் ஏ. எஸ். சி. பெரேராவின் துண்டு பீயும் ; தெற்கில் : பிரின்ஸி பெரேராவின் கூங்கஹவத்தையும் ; மேற்கில் : எம். எம். சொய்சாவின் தெல்கஹவத்தையும் எல்லைகளாகக் கொண்டு ஒரு றூட் பத்து பேர்ச்சுகள் (0ஏ. 1றூ. 10பே.) விஸ்தீரணமுடையது. இது பாணந்துறை காணிப்பதிவகத்தில் எவ். 340/62 இல் பதிவு செய்யப்பட்டது.

**இரண்டாவது அட்டவணை**

மேற்குறிப்பிட்ட தல்பிட்டிய வடக்கில் : அமைந்துள்ளதும் கிரிபெல்லகஹவத்த என அழைக்கப்படும் காணி மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 1111 இல் விவரித்த துண்டு 1சி (12அடி அகலப்பாதைக்கு ஒதுக்கப்பட்டது) என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில் வரைபடம் இல. 1111 இல. துண்டு 1ஏ யும், கிழக்கில் : தெபத்த றோட்டும்; தெற்கில் : வரைபடம் இல. 1460 இல. துண்டு 2 ஆம், மேற்கில் : துண்டு 1பீயும் எல்லைகளாகக் கொண்டு ஆறு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 06பே.) விஸ்தீரணமுடையது. இது பாணந்துறை காணிப்பதிவகத்தில் எவ். 340/63 இல் பதிவு செய்யப்பட்டது.

பணிப்பாளர்கள் சபை கட்டளைப்படி,

எம். ஏ. ஜி. கருணாரட்ன,
சிரேஷ்ட முகாமையாளர்,
(அறவிடல் கிளைகள்).

இலங்கை வங்கி,
அறவிடல் கிளைகள் பிரிவு,
இல.4, இலங்கை வங்கி மாவத்தை,
கொழும்பு - 01.
2006, திசெம்பர் 11.

1-120

**மக்கள் வங்கி - பொரளை கிளை**

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கி சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழ் மக்கள் வங்கியினால் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின்கீழ் மேற்குறிப்பிட்ட ஆதனத்தை 2006, சனவரி 27 ஆந் திகதி, மு. ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் நான், பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்வேன்.*

**காணி மற்றும் கட்டிடம் (மேல் மாகாணம், கொழும்பு மாவட்ட, ஹேவகம் கோறளை, பள்ளேபற்று, கடுவளை பிரதேச சபை எல்லை களுக்குள் மாலபேயில் அமைந்துள்ள 'அளுபோகஹவத்தை' என அழைக்கப்படும் காணி அதன்கண் அமைந்துள்ள எல்லாவற்றுடனும் சேர்த்து ஏல விற்பனை**

**(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 13.20பே.)**

**ஆதனத்திற்கு உட்பிரவேசிக்கும் வழி.**- மாலபே இலிருந்து அத்துருகிரிய வீதி, வழியே ஏறக்குறைய 1/2 கீ. மீ. தூரம் செல்ல வீதிக்கு வலப்பக்கத்திலுள்ள குரு வீதி வழியே ஏறக்குறைய 200 மீ. செல்ல வீதிக்கு இடப்பக்கத்தில் வரிமதிப்பு இல. 520/18 ஐக் கொண்ட விற்பனைக்குரிய இவ்வாதனம் அமைந்துள்ளது.

**மேலதிக விவரங்களுக்கு.**- 2003.09.05 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2003.08.25 ஆந் திகதிய "டெய்லி நியூஸ்", "தினமின" மற்றும் "தினகரன்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.**- வெற்றிபெறும் கொள்வனவாளர் ஏலமுடிவில் பின்வரும் தொகைகளை காசாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தவேண்டிய உள்ளூர் விற்பனை வரி 1% (ஒரு வீதம்) ;
(3) ஏலதாரரின் தரகு விற்பனை விலையின் 2 1/2% (இரண்டரை வீதம்) ;
(4) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 500 ;
(5) விற்பனைச் செலவு மற்றும் வேறேதேனும் கட்டணங்கள் (எவையேனுமிருப்பின்) ;
(6) விற்பனைச் சான்றிதழுக்கான முத்திரைக் கட்டணம்.

கொள்வனவு விலையின் மிகுதி 90% (தொண்ணூறு வீதம்) ஐ விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் "கொழும்பு 1 டியூக் வீதி, இல. 11 வலய அலுவலகம், மக்கள் வங்கி, உதவிப் பொது முகாமையாளர் (மேற்கு வலயம்)" இடம் செலுத்த வேண்டும். தொலைபேசி இல. : 2327848, 2393678, 4-717008.

உரித்து உறுதிகளையும் வேறேதேனும் குறிப்புகளையும் மேற்குறிப்பிட்ட முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

சொல்லப்பட்ட தொகை மேற்குறிப்பிடப்பட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால், ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) தண்டப் பணமாக அறவிடவும் ஆதனத்தை மீள்விற்பனை செய்யவும் வங்கிக்கு அதிகாரமுண்டு.

ஈ. எஸ். ராமநாயக்க
(தீவு முழுவதுக்குமான சமாதான நீதவான்),
நீதிமன்ற ஆணையாளர், உத்தரவுபெற்ற
ஏலதாரர் மற்றும் விலைமதிப்பிடுநர்.

இல. 11/55, குடாபுத்கமுவ,
அங்கொடை,
தொலைபேசி இல. : 2419126
தொலைநகல் இல. : 074-719526

1-121

---

**மக்கள் வங்கி-நீர்கொழும்பு கிளை**

**பெறுமதிமிக்க ஆதனம் (திவுலப்பிட்டி, நீர்கொழும்பு வீதி, தூனகஹ சந்திக்கு அண்மையில் த/ இதுரு அகார கிராமம், இல. 88டி இல் அமைந்துள்ளது) இரண்டு மாடி வீட்டுடன் சேர்த்து ஏல விற்பனை**

**(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 30பே.)**

**ஆதனத்திற்கு உட்பிரவேசிக்கும் வழி.**- திவுலப்பிட்டி-நீர்கொழும்பு வீதியில் தூனகஹ சந்திக்கு அண்மையில் வலப்பக்கத்திலுள்ள இதுராகார வீதி வழியே த/ இதுராகார கிராமம், இல. 88டி ஐக் கொண்ட இடத்தில் இவ்வாதனம் அமைந்துள்ளது.

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின்கீழ் மக்கள் வங்கியினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்கீழ் மேற்குறிப்பிடப்பட்ட ஆதனத்தை 2007.01.28 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் நான் பகிரங்க ஏலம்மூலம் விற்பனை செய்வேன்.*

**தீர்மான அறிவித்தலுக்கு.**- 2004.09.10 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2004.08.24 ஆந் திகதிய "டேய்லி நியூஸ்", "தினமின" மற்றும் "தினகரன்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.**- வெற்றிபெறும் கொள்வனவாளர் ஏலமுடிவில் பின்வரும் தொகைகளை காசாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்கு செலுத்தவேண்டிய உள்ளூர் விற்பனை வரி 1% (ஒரு வீதம்) ;
(3) ஏலதாரரின் தரகு விற்பனை விலையின் 2 1/2% (இரண்டரை வீதம்) ;
(4) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 500 ;
(5) விற்பனைச் செலவு மற்றும் வேறேதேனும் கட்டணங்கள் (எவையேனுமிருப்பின்) ;
(6) விற்பனைச் சான்றிதழுக்கான முத்திரைக் கட்டணம்.

கொள்வனவு விலையின் மிகுதி 90% ஐ விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் "நாத்தாண்டி, மாறவில வீதி, இல. 79, மக்கள் வங்கி (1 ஆவது தளம்), பிரதேச தலைமை அலுவலகம் (சிலாபம்), பிரதேச

முகாமையாளர்" இடம் செலுத்த வேண்டும். தொலைபேசி இல. : 032-2253300, 032-2253301 ; தொலைநகல் இல. : 032-2255247.

உரித்து உறுதிகளையும் வேறேதேனும் குறிப்புகளையும் மேற்குறிப்பிடப்பட்ட முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

சொல்லப்பட்ட தொகை மேற்குறிப்பிடப்பட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால், ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ஐ தண்டப்பணமாக அறவிடவும் ஆதனத்தை மீள் விற்பனை செய்யவும் வங்கிக்கு அதிகாரமுண்டு.

ஈ. எஸ். ராமநாயக்க,
(தீவு முழுவதிற்குமான சமாதான நீதவான்),
நீதிமன்ற ஆணையாளர்,
உத்தரவுபெற்ற ஏலதாரர் மற்றும் விலைமதிப்பிடுநர்.

இல. 11/55, குடாபுத்கமுவ,
அங்கொடை,
தொலைபேசி இல. : 011-2419126
தொலைநகல் இல. : 074-719526

1-122

---

**மக்கள் வங்கி-நீர்கொழும்பு கிளை**

**பெறுமதிமிக்க குடியிருப்பிற்கு தகுந்த காணி (நீர்கொழும்பு, ஓதரவாடி எனும் கிராமத்தில் அமைந்துள்ளது) தென்னைப் பயிர்ச்செய்கையுடன் சேர்த்து ஏல விற்பனை**

**(காணியின் விஸ்தீரணம் : 1ஏ. 4றூ. 20பே.)**

**ஆதனத்திற்கு உட்பிரவேசிக்கும் வழி.-** நீர்கொழும்பிலிருந்து மடம் பெல்ல சந்திவரை சென்று இடதுபக்கம் அமைந்துள்ள பொரளுகல வீதி வழியே ஏறக்குறைய 1 மைல் சென்றதும் இடப்பக்கத்தில் உள்ள வீதி வழியே ஏறக்குறைய 300 யார் செல்ல இவ்வாதனம் அமைந்துள்ளது.

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின்கீழ் மக்கள் வங்கியினால் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின்கீழ் மேற்குறிப்பிடப்பட்ட ஆதனம் 2007.01.21 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் நான் பகிரங்க ஏலம்மூலம் விற்பனை செய்வேன்.

**மேலதிக விபரங்களுக்கு.-** 2004.01.23 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2004.12.15 ஆந் திகதிய "தினமின", 2004.12.15 ஆந் திகதிய "டெய்லி நியூஸ்" மற்றும் 2004.12.15 ஆந் திகதிக "தினகரன்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.-** வெற்றிபெறும் கொள்வனவாளர் ஏலமுடிவில் பின்வரும் தொகைகளை காசாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்கு செலுத்தவேண்டிய உள்ளூர் விற்பனை வரி 1% (ஒரு வீதம்) ;
(3) ஏலதாரரின் தரகு விற்பனை விலையின் 2 1/2% (இரண்டரை வீதம்) ;
(4) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 500 ;
(5) விற்பனைச் செலவு மற்றும் வேறேதேனும் கட்டணங்கள் (எவையேனுமிருப்பின்) ;
(6) விற்பனைச் சான்றிதழுக்கான முத்திரைக் கட்டணம்.

கொள்வனவு விலையின் மிகுதி 90% ஐ விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் "நாத்தாண்டி, மாறவில வீதி, இல. 79, பிரதேச தலைமை அலுவலகம், (சிலாபம்), மக்கள் வங்கி (1 ஆவது தளம்), பிரதேச முகாமையாளர்" இடம் செலுத்தப்பட வேண்டும். தொலைபேசி இல. : 032-2253300, 032-2253301 ; தொலைநகல் இல. : 032-2255247.

உரித்து உறுதிகளையும் வேறேதேனும் குறிப்புகளையும் மேற்குறிப்பிடப்பட்ட முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

சொல்லப்பட்ட தொகை மேற்குறிப்பிடப்பட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால், ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ஐ தண்டப்பணமாக அறவிடவும் ஆதனத்தை மீள் விற்பனை செய்யவும் வங்கிக்கு அதிகாரமுண்டு.

ஈ. எஸ். ராமநாயக்க,
(தீவு முழுவதிற்குமான சமாதான நீதவான்),
நீதிமன்ற ஆணையாளர்,
உத்தரவுபெற்ற ஏலதாரர் மற்றும் விலைமதிப்பிடுநர்.

இல. 11/55, குடாபுத்கமுவ,
அங்கொடை,
தொலைபேசி இல. : 011-2419126
தொலைநகல் இல. : 074-719526

1-123

---

**மக்கள் வங்கி-கம்பஹா கிளை**

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின்கீழ் விற்பனை

**பெறுமதிமிக்க குடியிருப்பு ஆதனம் (யக்கல, கம்பஹா வீதி, இல. 22/24 இல் அமைந்துள்ளது) வீட்டுடன் சேர்த்து ஏல விற்பனை**

**(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 20.50பே.)**

**ஆதனத்தின் உட்பிரவேசிக்கும் வழி.-** யக்கலவிலிருந்து கம்பஹா நோக்கி ஏறக்குறைய 500 மீற்றர் தூரத்தில் பிரதான வீதியை அண்மையில் வரிமதிப்பு இல. 22/24 ஐக் கொண்டு இவ்வாதனம் அமைந்துள்ளது.

மக்கள் வங்கியினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்கீழ் மேற்குறிப்பிடப்பட்ட ஆதனத்தை 2007.01.25 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு அதே இடத்தில் நான் பகிரங்க ஏலம்மூலம் விற்பனை செய்வேன்.

***தீர்மான அறிவித்தலுக்கு***.- *1996.06.04 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 1999.05.06 ஆந் திகதிய "தினமின", "தினகரன்" மற்றும் "டெய்லி நியூஸ்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.*

**கொடுப்பனவு செய்யும் விதம்**.- வெற்றிபெறும் கொள்வனவாளர் ஏலமுடிவில் பின்வரும் தொகைகளை காசாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;

(2) உள்ளூர் அதிகார சபைக்கு செலுத்தவேண்டிய உள்ளூர் விற்பனை வரி 1% (ஒரு வீதம்) ;

(3) ஏலதாரரின் தரகு விற்பனை விலையின் 2 1/2% (இரண்டரை வீதம்) ;

(4) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 500 ;

(5) விற்பனைச் செலவு மற்றும் வேறேதேனும் கட்டணங்கள் (எவையேனுமிருப்பின்) ;

(6) விற்பனைச் சான்றிதழுக்கான முத்திரைக் கட்டணம்.

கொள்வனவு விலையின் மிகுதி 90% ஐ விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் "முதுன்கொடை, பெலும்மஹர, கண்டி வீதி, இல. 131, மேற்கு வலயம் 111, மக்கள் வங்கி-பிரதேச தலைமை அலுவலகம், பிரதேச முகாமையாளர்" இடம் செலுத்த வேண்டும். தொலைபேசி இல. : 033-2222325, 033-2226741 ; தொலைநகல் இல. : 033-2226165.

உரித்து உறுதிகளையும் வேறேதேனும் குறிப்புக்களையும் மேற்குறிப்பிடப்பட்ட முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

சொல்லப்பட்ட தொகை மேற்குறிப்பிடப்பட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால், ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ஐ தண்டப்பணமாக அறவிடவும் ஆதனத்தை மீள் விற்பனை செய்யவும் வங்கிக்கு அதிகாரமுண்டு.

ஈ. எஸ். ராமநாயக்க,
(தீவு முழுவதுக்குமான சமாதான நீதவான்),
உத்தரவுபெற்ற ஏலதாரர், தரகர்,
நீதிமன்ற ஆணையாளர்.

இல. 11/55, குடாபுத்கமுவ,
அங்கொடை,
தொலைபேசி இல. : 011-2419126.

1-124

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**1995 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது)**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் **விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்**.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8 அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 4.45 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணி வரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்**. தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்**.

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் "சுப்றீம் கோட்" புறொடக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1995 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 51 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதி | 51 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 504 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 1,008 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும், கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **1995 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம்** :-

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | உள்ளூர் ரூ. ச. | வெளியூர் ரூ. ச. |
|---|---|---|
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 1,612.00 | 2,098.00 |
| II ஆவது பகுதி தொடக்கம் VI பகுதி வரை தனிப்பகுதி | 572.00 | 745.00 |
| I வது பிரிவு | 520.00 | 1,007.00 |
| II வது பிரிவு (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆதியன) | 624.00 | 1,009.00 |
| III வது பிரிவு | 468.00 | 907.00 |
| அதிவிசேட விசேட வர்த்தமானி | 3,360.0 | 4,422.00 |

முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.

தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்

| | | விலை ரூ. ச. | அஞ்சற் செலவு (உள்ளூர்) ரூ. ச. |
|---|---|---|---|
| (அ) | I வது பகுதி | 31.00 | 5.00 |
| | II வது பகுதி தொடக்கம் VI பகுதி வரை ஒவ்வொரு பகுதியும் | 11.00 | 5.00 |
| (ஆ) | I வது பிரிவு | 10.00 | 5.00 |
| | II வது பிரிவு | 12.00 | 5.00 |
| | III வது பிரிவு | 9.00 | 5.00 |

**இவைகளில் எவையேனும் பெறவிரும்புவோர் சரியான பணத்தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், 32, லோட்ஸ் வீதி, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவார்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டுக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், 32, லோட்டஸ் வீதி, கொழும்பு 1** என்ற விலாசத்துக்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்படவேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தா பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.-** இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்** என்பதையும், **அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது** என்பதையும் கவனத்திற் கொள்க.

**அட்டவணை-2007**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **சனவரி** | .. | வெள்ளி | 05.01.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 22.12.2006 |
| | | வெள்ளி | 12.01.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 29.12.2006 |
| | | வெள்ளி | 19.01.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 05.01.2007 |
| | | வெள்ளி | 26.01.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 12.01.2007 |
| **பெப்புருவரி** | .. | வெள்ளி | 02.02.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.01.2007 |
| | | வெள்ளி | 09.02.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 26.01.2007 |
| | | வியாழன் | 15.02.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.02.2007 |
| | | வெள்ளி | 23.02.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 09.02.2007 |
| **மாச்சு** | .. | வெள்ளி | 02.03.2007 | .. | நண்பகல் 12 | வியாழன் | 15.02.2007 |
| | | வெள்ளி | 09.03.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.02.2007 |
| | | வெள்ளி | 16.03.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.03.2007 |
| | | வெள்ளி | 23.03.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 09.03.2007 |
| | | வெள்ளி | 30.03.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 16.03.2007 |

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2007, சனவரி 01.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.

B 4 - B 079431